சிவமயம்

மேற்கு அவுஸ்திரேலியா சைவ மகாசபை

# ஸ்ரீ பாலமுருகன் கோவில், பேர்த்

# பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

# SRI BALAMURUGAN TEMPLE, PERTH

# BALASTHAPANA KUMBABHISHEHAM WINGAPANAM



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.



உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!



பாற்கடல் தன்னை அழைத்தவனே
பாரொடு விண்ணாய்ப் பரந்தவனே
நூற்பொருள் தன்னை விரித்தோனே
நுண்ணிடை யாள்தன் இடத்தவனே!

முருகப்பெருமான் அடியார்களே!

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய கருணையினால் படைக்கப்பட்ட இப்பூவுலகில், சகல வளங்களும் நிறைந்த அவுஸ்திரேலியாக் கண்டத்தின் மேற்கு மாநிலமாகத்திகழும் பெருமைமிகு "பேர்த்" மாநகரில், நானிலமும் நயமுடன் சூழ்ந்த "மண்டோகிளப்" பகுதியிலமர்ந்த "கந்தகோட்டம்" என்னும் திவ்விய வளாகத்தில் அருள்மழை பொழியும் எம் பெருமான் குன்றுதோர் ஆடும் குமரன், கலியுகவரதன், "ஸ்ரீ பால முருகப்பெருமானுக்கும்" மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் "பாலஸ்தாபன கும்பாபிஷேகம் " நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

**பாலஸ்தாபன கும்பாபிஷேகம்** நிகழும் மங்களகரமான விகாரிவருடம் உத்தராயணம் கிரீஷ்மருது மிதுனத்திங்கள் (ஆனிமாதம்) 19ஆம் நாள் குருவாரம் (04.07.2019 வியாழக்கிழமை) சுக்கிலபட்ச துதியைத்திதியும் பூச நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் அமைந்த நன்னாளில் பகல் 11 மணி 15 நிமிடம் முதல் 12 மணி 30 நிமிடம் வரைக்குள் கன்னி லக்கின சுபவேளையில் நடைபெறும்.

இக்கோவிலில் ஆகமநெறிதழுவி 2020இல் நடைபெறவேண்டிய மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு இடம்பெறுகின்ற புனருத்தாரண திருப்பணிகளிலும் பாலஸ்தாபன கும்பாபிஷேக சுப நல்வேளையிலும் அதற்கு முன் பின் நடைபெறுகின்ற கிரியாகாலங்களிலும் அடியார்கள் யாவரும் ஆலயத்திற்கு வருகைதந்து எம்பெருமானைத் தரிசித்து திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# கிரியாகால உ நிகழ்வுகள்

## ஆனிமாதம் 18ஆம் நாள் (03-07-2019) புதன்கிழமை.

### காலை 10.30 மணி

குருஹோரை கூடிய நல்வேளையில் கர்மாரம்பம் , சிவாச்சார்யார்கள்-அழைப்பு, சர்வவிக்ன நிவாரக ஸ்ரீ பால விக்கினேஸ்வர பூஜை, புண்ணியாகவாசனம், அனுக்ஞை, கணபதிஹோமம், நவக்கிரஹஹோமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரஹணம் ஆகியன நடைபெறும்.
திருவருட்பிரசாதம் வழங்குதல்.

### மாலை 4.00 மணி

அங்குரார்ப்பணம், சிவாச்சார்ய ரக்ஷாபந்தனம், பாலாலய தீபஸ்தாபனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், அதிவாசம், கும்பம் யாகசாலாப்பிரவேசம், பேரசலனம்.

### இரவு 7.30 மணி முதல் 9.00 மணிக்குள்

பாலாலய பிம்பஸ்தாபனம்.
யாகபூஜை, ஹோமம், தீபாராதனை, சிவாச்சார்ய பூஜனம்.
திருவருட்பிரசாதம் வழங்குதல்.

## ஆனிமாதம் 19ஆம் நாள்(04-07-2019) வியாழக்கிழமை

### காலை 8.00 மணி

ஸ்ரீ மகாகணபதி பூஜை, புண்ணியாகவாசனம், யாகபூஜை, ஹோமம், விசேஷ திரவிய ஹோமம், பிம்பசுத்தி, பிம்பரக்ஷாபந்தனம், நியாசங்கள், ஸ்பர்சாகுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை பாராயணங்கள், யாத்ராதானம், நவக்கிரஹ தானம், மயூரபூஜை, கும்பம் புறப்பாடு.

### பகல் 11.15 மணிமுதல் 12.30 மணிக்குள்

ஸ்தூபி அபிஷேகம், "பாலஸ்தாபன கும்பாபிஷேகம் "
தசதர்சனம், மஹாபிஷேகம், தீபாராதனை, குருபாதபூஜை, ஆசீர்வாதம்.
திருவருட்பிரசாதம் வழங்குதல்.

மகேஸ்வர பூஜை (அன்னதானம்)

### பாலஸ்தாபன கும்பாபிஷேக சிவாச்சார்யார்கள்

பிரதம சிவாச்சார்யார்

"சிவாகம கிரியா பூஷணம், சிவாகமகிரியா தத்துவநிதி, பிரதிஷ்டா கிரியா சிரோமணி, ஸ்கந்தாராதன ஸம்கிரகர், பிரதிஷ்டா வித்வ சிரோமணி, ஈசாந சிவாச்சார்யார் "

***சிவஸ்ரீ சபாரத்தின பரமேஸ்வரக்குருக்கள்*** அவர்கள்

"பிரதிஷ்டா பூஷணம்,மந்திர கிரியாசுரபி" *சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள்* அவர்கள்

"சிவாகம பிரவீனர், சிவாகம விசாரதா " *வெங்கடேஸ்வர குருக்கள் சிவசுப்பிரமண்ய சிவாச்சாரியார்* அவர்கள்

"சிவாகமரத்னா" *சிவஸ்ரீ கணேஷ நாகேஸ்வரக்குருக்கள்* அவர்கள்

*முகூர்த்த நிர்ணயம் ;- வாக்கிய பஞ்சாங்கம் கொக்குவில் ,யாழ்ப்பாணம்*

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

09-06-2019
தலைவர்
நிர்வாக சபை

Saiva Maha Sabai(Inc.) WA
12 Mandogolup Road
Mandogolup 6167
Western Australia